செ.வெ.எண்.17 நாள் 09.01.12

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

# அறிக்கை – 9.1.2012

ஈரோடு மாவட்டம், வெண்டிபாளையத்திலுள்ள பவானி கட்டளை கதவணை நீர்மின்நிலையத்தினை அடுத்துள்ள காவேரி ஆற்றில், ஈரோடு மாநகர், சாஸ்திரி நகரைச் சேர்ந்த 9 நபர்கள் காவேரி ஆற்றின் நடுவே உள்ள மணல் திட்டில் விடுமுறையைக் கழிக்கச் சென்ற போது, பவானி கட்டளை கதவணை நீர்மின்நிலையத்தில் இருந்து 8.1.2012 அன்று வெளியேற்றப்பட்ட நீரினால் அடித்து செல்லப்பட்டு, 7 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற செய்தியைக் கேட்டு நான் ஆழ்ந்த வருத்தமும், மிகுந்த மன வேதனையும் அடைந்தேன்.

இவ்விபத்தில் அகால மரணமடைந்த ஏழு நபர்களின் குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்துயரச் சம்பவத்தில் உடனடியாக மீட்புப் பணிகளில் ஈடுபட்டு தேவையான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு, உயிரிழந்தவர்களின் சடலங்களை அடையாளம் கண்டு அவரவர் குடும்பத்தினரிடம் ஒப்படைத்து துயர் துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்ட நிருவாகங்களுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

மேலும், இத்துயர விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9